# தேவனுடைய சாயல் என்றால் என்ன?

## வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்

வேதாகம சத்தியத்தின்படி, தேவன் மனிதனை மாத்திரம் "தம்முடைய சாயலில்" சிருஷ்டித்துள்ளார். அதாவது தம்முடைய சில குணாதிசயங்களும் தன்மைகளும் உடையவனாக இருக்கும் விதத்தில் அவர் மனிதனை சிருஷ்டித்துள்ளார். இதனால், மனிதன் ஏனைய உயிரினங்கள் அனைத்தையும்விட மேலானவனாகவும் சிறப்பானவனாகவும் தேவனுக்கு மிகவும் நெருக்கமானவனாகவும் இருக்கின்றான்.[1] எனினும், சில கிறிஸ்தவர்கள் "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்னும் தேவனுடைய கூற்றைத் தவறாகப் புரிந்துகொண்டு, மனிதனைப் போலவே தேவனுக்கும் சரீரம் இருப்பதாகக் கருதுகின்றனர். ஆனால், தேவன் மானிடக் கண்களுக்குத் தென்படாத ஆவியாக இருப்பதனால் (கொலோ.1:15, 1தீமோ.1:17, எபி.11:27, யோவா.4:24),[2] அவர் சரீரமற்றவராகவே இருக்கின்றார். இதனால்தான், தேவனை எத்தகைய உருவத்திலும் நாம் வழிபடக்கூடாது என்று வேதாகமம் கூறுகிறது (யாத்.20:3-5).[3] எனவே, மானிட சரீரத்தைத் தேவனுடைய சாயலாகக் கருதமுடியாது.[4] எனினும், மனிதர்களாகிய நாம் தேவனைப் புரிந்துகொள்வதற்காகவே அவருக்கு மானிட அவயவங்களும் உணர்வுகளும் இருப்பதாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், இத்தகைய உருவக விவரணங்களை சொல்லர்த்தமாகப் புரிந்துகொண்டு, தேவனுக்கு உருவம் அல்லது சரீரம் இருப்பதாக நாம் கருதுவது தவறாகும்.

வேதாகமத்தின் தமிழ் மொழிபெயர்ப்பில் உள்ள "ரூபம்" என்னும் சொல்லும், தமிழில் இவ்வசனம் மொழிபெயர்க்கப்பட்டுள்ள விதமும் தவறான அர்த்தத்தைத் தருவதாகவே உள்ளது. திருவிவிலியத்தில் ரூபம் என்பதை "உருவம்" என்று குறிப்பிட்டு, தேவனுக்கு உருவம் உள்ளது என்னும் தவறான எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால், "சாயல்" என்றால் என்ன என்பதை விளக்கும் விதத்திலேயே மூலமொழியில் "ரூபம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் உள்ளது. இதனால்தான், ஆங்கில வேதாகமங்களில் "ரூபம்" என்பது likeness என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, தேவனுடைய சாயல் என்பது, "அவரைப் போன்ற தன்மை" என்பதை அறியத்தரும் விதத்தில் ஆங்கில வேதாகமத்தின் மொழிபெயர்ப்பு உள்ளது.[5] உண்மையில், "தேவனுடைய சாயல்" என்னும் சொல் தவறாகப் புரிந்து கொள்ளப்படலாம் என்பதற்காகவே, இதை விளக்கும் விதத்தில் ரூபம் என்பதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள சொல் சேர்க்கப்பட்டுள்ளதை மூலமொழியில் இவ்வசனத்தின் இலக்கண அமைப்புமுறை

---

[1] J.E.Hartley, *Genesis: New International Biblical Commentary*, p. 48; N.M.Sarna, *Genesis: The JPS Torah Commentary*, p. 12.

[2] கொலோசெயர் 1:15லும் 1தீமோத்தேயு 1:17லும் எபரேயர் 11:27லும் தேவன் "அதரிசனமானவர்" என்றும், யோவான் 4:24ல் அவர் "ஆவியாயிருக்கிறார்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[3] G.P.Duffield & N.M.Van Cleave, *Foundations of Pentecostal Theology*, p. 123. யாத்திரகமம் 20:3-5ல் "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[4] P.Enns, *The Moody Handbook of Theology*, p. 305; H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 155; A.P.Ross, *Creation and Blessing: A Guide to the Study and Exposition of Genesis*, p. 112; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 33; A.Ross, *Genesis: Cornerstone Biblical Commentary*, p. 39; H.C.Leupold, *Exposition of Genesis Volume 1*, p. 90.

[5] கி.பி.16ஆம் நூற்றாண்டில் சபையில் சீர்திருத்தம் ஏற்படும்வரை பெரும்பாலான கிறிஸ்தவத் தலைவர்கள் சாயல் ரூபம் என்னும் இரண்டு சொற்களையும் மனிதனில் இருக்கும் இரண்டு வித்தியாசமான அம்சங்களாகக் கருதியதோடு, இவற்றில் ஒன்று பாவத்தின் பின்னர் இல்லாமல் போய்விட்டது என்றும் போதித்தார்கள். இத்தகைய போதனையின் செல்வாக்கு காரணமாகவே தற்காலத்திலும் மனிதனிலிருக்கும் ஆவியையும் ஆத்துமாவையும் இரண்டு பகுதிகளாகப் பலர் கருதுகின்றனர். ஆனால், வேதாகமத்தில் ஆவியும் ஆத்துமாவும் ஒத்தக்கருத்தள்ள சொற்களாக இருப்பதைப் போலவே, சாயல் ரூபம் என்னும் இரண்டு செற்களும் ஒத்தக்கருத்துள்ள சொற்களாகவே உபயோகிக்கப்பட்டுள்ளன. இதனால்தான், மூலமொழியில் சாயல் ரூபம் என்னும் இரண்டு செற்களும் மனிதனின் வித்தியாசமான பகுதிகளைக் குறிக்கும் விதத்தில் இரண்டு சொற்களுக்கும் இடையில் உம் என்னும் சொல் இல்லை. மேலும், ஆதியாகமம் 1:27இலும், 5:1இலும் சாயல் என்னும் சொல் மாத்திரமே உள்ளது. எனவே, இரண்டு சொற்களும் மனிதனின் இரண்டு பகுதிகளைக் குறிக்கின்றன என்று கூறமுடியாது (C.J.Collins, *Genesis 1-4: A linguistic, Literary, and Theological Commentary*, p. 62).

அறியத்தருகின்றது.[6] மேலும், ரூபம் என்னும் சொல் மூலமொழியில் மானிட சரீரத்தைக் குறிப்பிடவில்லை. ஏனெனில், சாயல், ரூபம் என்னும் இரண்டு சொற்களும் ஒத்தக்கருத்துள்ள சொற்களாகவே இவ்வசனத்தில் உள்ளன.[7] இதனால்தான், மனிதனிலிருக்கும் தேவனுடைய சாயலைப்பற்றிய ஏனைய வேதப் பகுதிகளில் (ஆதி.5:1, 9:6, 1கொரி.11:7, கொலோ.3:10, யாக்.3:9) தேவனுடைய சாயலைக் குறிப்பிட இவற்றில் ஏதாவது ஒரு சொல் மாத்திரம் உபயோகிக்கப்பட்டுள்ளது.[8] மேலும், புராதன எகிப்திய மற்றும் மெசப்பத்தோமிய இலக்கியங்களில் "தேவனுடைய சாயல்" என்பது, உயர்ந்த அந்தஸ்தைக் குறிப்பிடும் சொற்பிரயோகமாக உள்ளது. எனவே, மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான் என்று கூறும்போது, அவன் ஏனைய உயிரினங்களைவிட மேலான நிலையில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான் என்பதையே வேதாகமம் அறியத்தருகின்றது.[9]

மனிதன் தேவனுடைய சாயலில், அதாவது ஏனைய உயிரினங்களைவிட மேலான நிலையில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதினால், அவன் தேவனைப்போன்ற சில தன்மைகளை உடையவனாக இருக்கின்றான்.[10] எனினும், இதனால் மனிதனும் தெய்வம் என்று எண்ணுவது தவறாகும். ஏனெனில், தேவனைப் பொறுத்தவரை அவருடைய சில தன்மைகளும் குணாதிசயங்களும் அவருக்கு மாத்திரம் உரியவைகளாகும். அதாவது, சர்வவல்லமை, எங்குமிருக்கும் தன்மை, எல்லாவற்றையும் அறியும் ஆற்றல் போன்றவை அவர் எவருடனும் பகிர்ந்துகொள்ளும் தன்மைகள் அல்ல. ஆனால், அவர் தம்முடைய சில தன்மைகளையும் குணாதிசயங்களையும் மனிதனில் வைத்துள்ளார். இவைகளே மனிதனில் இருக்கும் தேவனுடைய சாயலாக உள்ளது.[11] ஆனால், தேவன் ஆவியாய் இருப்பதனால், மனிதனில் இருக்கும் ஆவிக்குரிய தன்மைகளே அவனில் இருக்கும் தேவனுடைய சாயலாக உள்ளது.[12] அதாவது, பகுத்தறிவு, சிந்தனையாற்றல், மனசாட்சி, சுயசித்தம் சுயஉணர்வு என்பன மனிதனிலிருக்கும் தேவனுடைய சாயலின் அம்சங்களாய் உள்ளன.[13] எனவே, இவற்றை உள்ளடக்கிய மனிதனுடைய ஆள்தத்துவம் (personality) அவனில் இருக்கும் தேவனுடைய சாயலாய் உள்ளது.[14] மேலும், பரிசுத்தம், நீதி, அன்பு என்னும் தன்மைகளும் மனிதனிலிருக்கும் தேவனுடைய சாயலின் சில அம்சங்களாக உள்ளன.[15] இதனால்தான், கிறிஸ்தவர்கள் தரித்துக்கொள்ள வேண்டிய "தேவனுடைய சாயலான புதிய மனிதனில்" இத்தகைய அம்சங்கள் இருப்பதாக எபேசியர் 4:24இலும் கொலோசெயர் 3:10இலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மனிதனுடைய ஆள்தத்துவமும், ஆவிக்குரிய தன்மையும் ஒழுக்கக் குணங்களும் மனிதனிலிருக்கும் தேவனுடைய சாயலாக உள்ளது.[16]

---

[6] R.L.Harris, ed., *Theological Wordbook of the Old Testament Volume 1*, pp. 191-192; V.P.Hamilton, *Genesis 1-17: The New International Commentary on the Old Testament*, pp. 135-136; G.J.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Volume 1*, p. 30; J.Calvin, *Genesis: The Geneva Series of Commentaries*, p. 94; H.C.Leupold, *Exposition of Genesis Volume 1*, p. 89.

[7] J.Coleson, *Genesis 1-11: New Beacon Bible Commentary*, p. 67; R.C.Sproul, *Truths We Confess: A Layman's Guide to the Westminster Confession of Faith*, p. 135; C.F.Keil & F.Delitzsch, *Commentary on the Old Testament, Volume 1*, p. 39. D.Kidner, *Genesis: Tyndale Old Testament Commentary*, p. 51; K.O.Gangel & S.J.Bramer, *Genesis: Holman Old Testament Commentary*, p. 14; D.F.Kelly, *Creation and Change: Genesis 1:1-2:4 in the Light of Changing Scientific Paradigms*, p. 218. மூலமொழியில் இவ்வசனம் கவிதை நடையில் இருப்பதனால், எபிரேயக் கவிதைகளில் காணப்படும் சமத்தன்மையின்படி, "ரூபம்" "சாயல்" என்னும் இரண்டு சொற்களும் ஒத்தக்கருத்துள்ள சொற்களாக உபயோகிக்கப்பட்டுள்ளன. எபிரேயக் கவிதைகளில் காணப்படும் சமத்தன்மையைப்பற்றிய முழுமையான விளக்கத்திற்கு எனது "சங்கீதங்களின் சத்தியங்கள்" என்னும் நூலைப் பார்க்கவும்.

[8] R.C.Sproul, *Essential Truths of the Christian Faith: A Layman's Guide to the Westminster Confession of Faith*, p. 131; C.R.Swindoll & R.B.Zuck, ed., *Understanding Christian Theology*, p.674; L.Berkhof, *Systematic Theology*, p. 203; C.Feinberg, *The Image of God*, p. 237; S.R.Driver, *The Book of Genesis*, pp. 14-15; R.Prenter, *Creation and Redemption*, p. 283; R.Youngblood, *Genesis: An Introductory Commentary*, p. 30; C.J.Collins, *Genesis 1-4: A linguistic, Literary, and Theological Commentary*, p. 62).

[9] J.E.Hartley, *Genesis: New International Biblical Commentary*, pp. 53-54; N.M.Sarna, *Genesis: The JPS Torah Commentary*, p. 12.

[10] J.Coleson, *Genesis 1-11: New Beacon Bible Commentary*, p. 67.

[11] A.Ross, *Genesis: Cornerstone Biblical Commentary*, pp. 37,39.

[12] C.F.Keil & F.Delitzsch, *Commentary on the Old Testament, Volume 1*, p. 39.

[13] C.Hodge, *Systematic Theology Volume 2*, pp. 96-97.

[14] G.P.Duffield & N.M.Van Cleave, *Foundations of Pentecostal Theology*, p. 124.

[15] L.Berkhof, *Syatematic Theology*, p. 204; C.Hodge, *Systematic Theology Volume 2*, p. 99.

[16] J.M.Boice, *Genesis 1-11: An Expositional Commentary*, p. 95.

எனினும், மனிதன் மாத்திரமே இத்தகைய தன்மைகளுடன் சிருஷ்டிக்கப்பட் டுள்ளான். ஏனைய உயிரினங்களில் இத்தகைய தன்மைகள் இல்லை. இதனால், ஏனைய உயிரினங்களில் இருந்தே மனிதன் பரிணாமமடைந்து வந்துள்ளான் என்று எவ்விதத்திலும் கூறமுடியாது.

தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார் என்பதை அறியத்தரும் 27ஆம் வசனத்தில், தேவன் மனிதனை "ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்தார்" என்றும் குறிப்பிடப்பட்டிருப்பதனால், தேவனுடைய சாயலின் ஒரு அம்சமாக ஆண் பெண் என்னும் பாலினத் தன்மைகள் இருப்பதாகச் சிலர் கருதுகின்றனர்.[17] இத்தகைய கருத்தின் அடிப்படையில், தேவன் ஆணாக மட்டுமல்ல பெண்ணாகவும் இருப்பதாகப் பெண்ணியல் இறையியலாளர்கள் வாதிடுகின்றனர். ஆனால், தேவன் ஆவியாய் இருப்பதனால், ஆவியுலக ஜீவிகளான தேவதூதர்களைப் போலவே தேவனும் ஆண் பெண் என்னும் பாலின பிரிவுகளுக்கு அப்பாட்பட்டவராக இருக்கின்றார். எனினும், ஆண் பெண் இருவருமே தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளனர். அதாவது, இருவரிலும் தேவனுடைய சாயல் இருக்கின்றது.[18] மேலும், தேவன் மனிதனை மாத்திரமல்ல, ஏனைய உயிரினங்களையும் ஆணும் பெண்ணுமாகவே சிருஷ்டித்துள்ளார். எனவே, தேவனுடைய சாயலின் ஒரு அம்சம் ஆணும் பெண்ணுமாக இருத்தல் என்றால், ஏனைய உயிரினங்களும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதாகவே கருதவேண்டும். ஆனால், மனிதன் மாத்திரமே தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதினால், ஆணும் பெண்ணுமாய் இருப்பதைத் தேவனுடைய சாயலாகக் கருதமுடியாது. இதைப்போலவே, சில இறையியலாளர்கள் மனிதனுக்கு அருளப்பட்ட ஏனைய சிருஷ்டிப்பை ஆளுகை செய்யும் அதிகாரத்தையும் தேவனுடைய சாயலின் ஒரு பகுதியாகக் கருதுகின்றனர்.[19] ஆனால், இது மனிதனுக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு பணியாக இருப்பதனால் இதை மனிதனில் இருக்கும் தேவனுடைய சாயலின் ஒரு அம்சம் என்று கூற முடியாது.[20] உண்மையில், மனிதன் தேவனுடைய சாயலில் இருப்பதனாலேயே அவன் தேவனுடைய சிருஷ்டிப்பை ஆளுகைசெய்யக் கூடியவனாக இருந்தான்.[21] எனவே, மனிதனுடைய ஆவிக்குரிய தன்மையும், ஆள்தத்துவமும், பரிசுத்தமும், நீதி, அன்பு என்னும் தன்மைகளுமே அவனிலிருக்கும் தேவனுடைய சாயலின் அம்சங்களாக உள்ளன.[22]

சில கிறிஸ்தவர்கள், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த பின்னர் அவர்களில் இருந்த தேவனுடைய சாயல் முழுமையாக இல்லாமல் போய்விட்டது என்று எண்ணுகின்றனர். ஆனால் பாவத்திற்குப் பின்பும் மனிதன் தேவனுடைய சாயலில் இருப்பதாகவே ஆதியாகம் 9:6, 1கொரிந்தியர் 11:7, யாக்கோபு 3:9 என்னும் வசனங்கள் கூறுகின்றன.[23] எனினும், பாவத்தின் பின்னர் மனிதனில் இருக்கும் தேவனுடைய சாயல் சிதைவடைந்துள்ளதோடு, அதன் சில பகுதிகள் இல்லாமற்போயுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.[24] ஆதியாகமம் 5:3இல், "ஆதாம் தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்றான்" என்னும் வாக்கியம், ஆதாமில் தேவனுடைய சாயல் இருந்ததினால், அவனுடைய குமாரனிலும் அச்சாயல் இருந்துள்ளதையே அறியத்தருகிறது.[25] எனினும் இது பாவத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதினால்தான், ஒருவன் இரட்சிக்கப்பட்ட பின்னர் தேவன் தம்முடைய சாயலை மறுபடியுமாக அவனில் உருவாக்குகிறார்.

---

[17] K.Barth, *The Doctrine of Creation*, p. 214; J.H.Sailhamer, *Genesis: The Expositor's Bible Commentary Volume 2*, p. 38.
[18] T.Longman, *Genesis: The Story of God Bible Commentary*, p. 39.
[19] R.C.Sproul, *Essential Truths of the Christian Faith*, p. 132; J.D.Currid, *Genesis Volume 1: Evangelical Study Commentary*, p. 84; B.T.Arnold, *Genesis: The New Cambridge Bible Commentary*, p. 45; R.Davidson, *Genesis 1-11: The Cambridge Bible Commentary*, p. 25; A.E.Steinmann, *Genesis: Tyndale Old Testament Commentary*, p. 57.
[20] J.Skinner, *A Critical and Exegetical Commentary on Genesis*, p. 32.
[21] G.Von Rad, *Genesis: The Old Testament Library Commentary*, pp. 59-60; C.Westermann, *Genesis 1-11: A Continenental Commentary*, p. 155; A.G.Fruchtenbaum, *Genesis: Ariel's Bible Commentary*, p. 59; D.Kidner, *Genesis: Tyndale Old Testament Commentary*, p. 52.
[22] R.W.Wilson & C.L.Blomberg, "The Image of God in Humanity: A Biblical-Psychological Perspective" in *Themelios*. 18 (1993), pp. 8-15.
[23] C.J.Collins, *Genesis 1-4: A linguistic, Literary, and Theological Commentary*, p. 64.
[24] C.R.Swindoll, ed., *The Theological Wordbook*, pp. 178-179; P.Enns, *The Moody Handbook of Theology*, p. 305; J.H.Walton, *Genesis: The NIV Application Commentary*, pp. 130-131.
[25] K.A.Mathews, *Genesis 1-11: The New American Commentary*, p. 170.

ஏனெனில், பாவிகளை இரட்சிக்கும் தேவனுடைய திட்டத்தின் நோக்கம், அவர்களைத் தேவனுடைய சாயலுக்கு ஒப்பாக மறுபடியும் மாற்றுவதாகவே உள்ளது. இதனால்தான், "தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோ.8:29) என்று வேதாகமம் கூறுகிறது. இயேசுகிறிஸ்து தேவனாக இருப்பதனால் (1தீமோ.3:16, யோவா.1:1,14) அவருடைய சாயல் நம்மில் உருவாகவேண்டும் என்பதே மானிட இரட்சிப்பில் தேவனுக்கிருக்கும் நோக்கம் என்பதையே ரோமர் 8:29 அறியத்தருகின்றது. இதனால்தான், இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியினால் மீட்கப்பட்ட வர்கள் "பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருப்பதாகக் கொலோசெயர் 3:9-10 கூறுகிறது.

மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதினாலேயே அவனால் தேவனுடன் தொடர்பு கொள்ளக்கூடியதாய் உள்ளது.[26] எனவே, தேவனுடனான உறவும்,[27] பேச்சாற்றலும் மனிதனிலிருக்கும் தேவனுடைய சாயலின் ஒரு அம்சமாகவே உள்ளது.[28] ஏனெனில், "பேசக்கூடிய ஆற்றலுள்ள தேவனால் மாத்திரமே பேசக்கூடிய மனிதனை சிருஷ்டிக்க முடியும்."[29] மேலும், மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதினால், அவன் தேவனுடைய பிரதிநிதியாக அவருடைய சிருஷ்டிப்பை ஆளுகை செய்கிறவனாகவும்,[30] தேவனைப் பின்பற்றுகிறவனாகவும்,[31] அவரைப் பிரதிபலிக்கின்றவனாகவும் இருக்கின்றான்.[32] உண்மையில், மனிதனிலிருந்து ஏனைய உயிரினங்களை வேறுபடுத்தும் சிறப்பம்சம் அவனில் இருக்கும் தேவனுடைய சாயலேயாகும்.

---

[26] C.Hodge, *Systematic Theology Volume 2*, pp. 96-97; C.Westermann, *Genesis 1-11: A Continenental Commentary*, p. 158; K.O.Gangel & S.J.Bramer, *Genesis: Holman Old Testament Commentary*, p. 19.
[27] D.Atkinson, *Genesis: The Bible Speak Today Commentary*, p. 38.
[28] J.E.Hartley, *Genesis: New International Biblical Commentary*, p. 49.
[29] D.F.Kelly, *Creation and Change: Genesis 1:1-2:4 in the Light of Changing Scientific Paradigms*, p. 223.
[30] J.Moltmann, *God in Creation*, p. 221.
[31] G.J.Wenham, *Genesis 1-11: Word Biblical Commentary Volume 1*, p. 39.
[32] D.Atkinson, *Genesis: The Bible Speak Today Commentary*, p. 40; J.C.L.Gibson, *Genesis: The Daily Study Bible Commentary*, p. 76.